

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை, முகாம் அலுவலகத்தில் கழக சிறுபான்மை யினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் சுபேர்கான் தமது பிறந்த நாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.3.2025) தலைமைச் செயலகத்தில், புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆணையத்தின் தலைவர் சையத் முசம்மில் அப்பாஸ், (ஓய்வு) மற்றும் உறுப்பினர் டாக்டர். என். வாசுதேவன், புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மாநில வல்லுநர் மதிப்பீட்டு குழு 1 தலைவர் PWC, டேவிடார், (ஓய்வு), மாநில வல்லுநர் மதிப்பீட்டு குழு 2 இன் தலைவர் டாக்டர் வி. பழனிக்குமார், (ஓய்வு), உறுப்பினர்கள் எம். கந்தன், எஸ். ரகுபதி, கே. அசோக், பேராசிரியர் டாக்டர் கே. பழனிவேலு, டாக்டர் ஆர். வெங்கடேசன், கே. ராம்மோகன், (ஓய்வு), பி. ராமசாமி மற்றும் உறுப்பினர் செயலர் ஆர். கோபகுமார் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் அமைச்சர் தங்கம் தென்னாக, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், ஆகியோர் உள்ளனர்.



# தி.மு.க. இளைஞர் அணி



## இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

## ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

## கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாக புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்க செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு, இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 16.03.2025 | வேலூர் | கீழ்வழித்துணையாங்குப்பம் | புதிய புறவழிச்சாலை, காளியம்மன்பட்டி, கொண்டசமுத்திரம் | **நாஞ்சில் சம்பத்,** ஜா.முஹம்மத் ஜபீர் |
| 2 | 16.03.2025 | திருப்பத்தூர் | ஜோலார்பேட்டை | கோடியூர் சந்தை அருகில், ஜோலார்பேட்டை | ராஜகம்பீரன் அப்பாஸ், கு.விஜயகுமார் |
| 3 | 16.03.2025 | தருமபுரி மேற்கு | பாப்பிரெட்டிப்பட்டி | பேருந்து நிலையம் அருகில், கடத்தூர் | வே.மதிமாறன், த.தங்கமுத்து |
| 4 | 16.03.2025 | ஈரோடு தெற்கு | ஈரோடு மேற்கு | விநாயகர் கோயில் திடல், சித்தோடு | தி.செந்தில்வேல், சூ.க.தாரணி |
| 5 | 16.03.2025 | மதுரை வடக்கு | மதுரை மேற்கு | ரவுண்டானா, பழங்காநத்தம் | வழக்கறிஞர் தமிழன்பிரசன்னா, ரா.ஜெயஸ்ரீ |
| 6 | 16.03.2025 | தென்காசி வடக்கு | வாசுதேவநல்லூர் | காமராஜர் சிலை முன்பு, வாசுதேவநல்லூர் | சூர்யாசேவியர், ரா.ரேவதி |
| 7 | 16.03.2025 | சென்னை தெற்கு | சைதாப்பேட்டை | பொன்னியம்மன் கோயில் தெரு, கோட்டூர் மார்க்கெட் | வழக்கறிஞர் ராஜீவ்காந்தி, சை.இம்ரான் |
| 8 | 16.03.2025 | கடலூர் மேற்கு | விருதாச்சலம் | பெரியார் திடல், எம்.பட்டி | மதுரை பாலா, தி.எஃபினா மேரி |
| 9 | 16.03.2025 | கடலூர் மேற்கு | திட்டக்குடி | அண்ணா திடல், ஆக்கனூர் | **முனைவர் இரா.தி.சபாபதி மோகன்,** சி.வெ.க.வெங்கடேசன் |
| 10 | 16.03.2025 | திருச்சி மத்திய | திருச்சி மேற்கு | குறத்தெரு, உறையூர் | மில்டன், சிந்துநதி |
| 11 | 16.03.2025 | திண்டுக்கல் கிழக்கு | ஆத்தூர் | பேரூராட்சி அலுவலகம் அருகில், தாடிக்கொம்பு | இந்திரகுமார் தேரடி, செல்வக்குமார் |
| 12 | 17.03.2025 | ஈரோடு தெற்கு | ஈரோடு கிழக்கு | கே.என்.கே.ரோடு | வழக்கறிஞர் தமிழன்பிரசன்னா, செ.தமிழரசன் |
| 13 | 17.03.2025 | சென்னை தெற்கு | மதுரவாயல் | நாயுடு தெரு, ராமாபுரம் | **மாண்புமிகு கோவி.செழியன்,** க.சுபத்ரா |
| 14 | 17.03.2025 | சென்னை வடகிழக்கு | மாதவரம் | மோரை, அண்ணாநகர் | வழக்கறிஞர் ராஜீவ்காந்தி, செ.ஜோதி |
| 15 | 19.03.2025 | மதுரை வடக்கு | மதுரை கிழக்கு | பேருந்து நிலையம் அருகில், ஆனையூர் | **திண்டுக்கல் லியோனி,** சி.ராஜபாரதி |
| 16 | 19.03.2025 | ஈரோடு மத்திய | பெருந்துறை | காஞ்சிக்கோயில் | இந்திரகுமார் தேரடி, ரா.அபிநயா |
| 17 | 19.03.2025 | விழுப்புரம் வடக்கு | திண்டிவனம் | கூனிமேடு | வழக்கறிஞர் தமிழன்பிரசன்னா, ச.ஷாநவாஸ் |
| 18 | 20.03.2025 | மதுரை வடக்கு | சோழவந்தான் | சந்தை அருகில், வாடிப்பட்டி | **நாஞ்சில் சம்பத்,** அ.செசிலின் சந்தியா தீப்தி |
| 19 | 20.03.2025 | விழுப்புரம் வடக்கு | செஞ்சி | அப்பம்பட்டு | **பொன்.முத்துராமலிங்கம்,** குடிஅரசு |

**அன்பகம்,** சென்னை – 18.
நாள் : 14–03–2025.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி